பக்கங்கள்:-31

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 31 | சனிக்கிழமை | 28.02.2026 | அதிர்வு 212

**சுரேஷ் சலே கைது விவகாரம்:**

## மார்ச் 3 ஆம் திகதி சபையில் அனல் பறக்கும் விவாதங்கள்



மார்ச் மாதத் துக்கான நாடா ளுமன்றத்தின் முதலாவது வார அமர்வுகள் 09

# சுரேஷ் சலே 90 நாள்கள் தடுப்புக்காவலில்



## பாதுகாப்பு அமைச்சு அனுமதி

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயை 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் ஒரு முக்கிய திருப்பமாக, சுரேஷ் சலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி பேலியகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அவரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி 09






# அடுத்த இலக்கு கோட்டாபயவே!

## அரசு நடத்துவது திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல்
## சுரேஷ் சலே கைது விவகாரத்தில் விமல் காட்டம்

**அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கான ஒரு முன்னோடியே தவிர வேறில்லை எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.** 06




அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பனிப்பாஎர் மேஜர் ஜென்ரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்ட விடயங்களை ஒட்டி இரண்டு முன்னாள் அமைச்சர்கள் கூறியிருக்கின்ற எதிர்வு கூறல்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

சுரேஷ் சலேவுக்கு அடுத்த இலக்கு முன்னாள் ஜனாதிபதியும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவே என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிடுவது வெறும் அரசியல் கூற்றல்ல.

அதே போலவே இந்தக் கைது பெரும் சுனாமியை ஏற்படுத்தலாம் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா கூறுவதும் புறமொதுக்கத் தக்கதல்ல.

இரண்டும் நடக்கக்கூடியவை என்கின்றன கொழும்பு பாதுகாப்பு மற்றும் அரசியல் வட்டாரங்கள்.

வரும் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை நாடாளுமன்றம் கூடுகின்ற போது அங்கு சுரேஷ் சலே கைது தொடர்பான 06



# கச்சதீவில் நிறைந்த பக்தர் கூட்டம்

**(கச்சதீவில் இருந்து நடராசா லோகதயாளன்)**

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கு எதிர்பார்த்த பக்தர் எண்ணிக்கையை விடவும் அதிகரித்த அளவு பக்தர்கள் வருகை தந்தமையால் பயணத்தில் கடும் நெருக்கடி எதிர்கொள்ளப்படுகின்றது.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பித்து இன்று நிறைவுபெறவுள்ளது.

இதற்காக இந்தியாவில் இருந்து 4 ஆயிரம்பேரும் இலங்கையில் இருந்து 5 ஆயிரம் பேரும் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்பட்டு ஏற்பாடுகளை யாழ். மாவட்டச் செயலகம் மேற்கொண்டது.

இந்த ஏற்பாட்டின்போது குறிகட்டுவானில் இருந்து வருடாந்தம் 3 ஆயிரத்திற்கும் உட்பட்ட பக்தர்கள் பயணத்தை மேற்கொள்வர் என எதிர்பார்த்த போதும் நேற்று 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பயணித்துள்ளனர் என்ச் மாவட்ட அரச அதிபர் தகவல் தெரிவித்தார்.

அதிக பக்தர்கள் காரணமாக இன்று கச்சதீவில் அதிக நெருக்கடி ஏற்படுமோ என பக்தர்கள் இடையே குழப்பம் காணப்படுகின்றது.











## கச்சதீவில் நேற்று

# தமிழக வெற்றிக் கழகக் கொடியுடன் பயணித்த இலங்கை இளைஞர்கள்!

### ஆர்வத்துடன் பார்த்த இந்திய யாத்திரிகர்கள்

**(கச்சதீவில் இருந்து நடராசா லோகதயாளன்)**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்குச் சென்ற இலங்கைப் படகு ஒன்றில், "தமிழக வெற்றிக் கழகத்தின்" கொடி பறக்கவிடப்பட்டிருந்தமை அங்கு கூடியிருந்த இந்திய யாத்திரிகர்களிடையே பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கச்சதீவில் திரண்டுள்ளனர்.

இதன்போது, இலங்கையிலிருந்து சிறிய படகு ஒன்றில் கச்சதீவுக்குப் பயணித்த சில இளைஞர்கள், நடிகர் விஜய்யின் தலைமையிலான "தமிழக வெற்றிக் கழகத்தின்" கொடியை ஏந்தியவாறு பயணித்தனர்.

இலங்கைப் படகில் தமிழக அரசியல் கட்சி ஒன்றின் கொடி பறப்பதைக் கண்ட அங்கிருந்த இந்திய யாத்திரிகர்கள் மற்றும் ஏனைய பக்தர்கள், அதனை மிகுந்த வியப்புடனும் ஆர்வத்துடனும் அவதானித்தனர்.

## நிலக்கரி மோசடி:

# துறைசார் அமைச்சருக்கு எதிராக பிரேரணை கோருகின்றது 'மொட்டு'

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக, துறைசார் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்:-

"தரமற்ற நிலக்கரி இறக்குமதி விவகாரத்தில் பொறுப்புக்கூற வேண்டிய துறைசார் அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும். அத்தகைய பிரேரணை முன்வைக்கப்படும்போது, அதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் முடிவாக இருக்கும்.




தற்போதைய அரசிடம் நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்கள் இருப்பதால், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படலாம். ஆனால், நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்றாலும் மக்கள் மத்தியில் இந்த அரசு ஏற்கனவே நம்பிக்கையை இழந்துவிட்டது.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் மக்களின் இந்த அதிருப்தி தெளிவாகப் புலனாகும். எனவே, அரசு தேர்தலை ஒத்திவைக்காமல் உடனடியாக அதனை நடத்த முன்வர வேண்டும்." – என்றார்.

# பிரிவினைவாதிகளைத் திருப்திப்படுத்தவே சுரேஷ் சலேயைக் கைது செய்த அநுர அரசு!

## மொட்டுவின் முன்னாள் எம்.பி. சம்பத் அத்துகோரல காட்டம்




அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் கைது நடவடிக்கை, பிரிவினை வாதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட ஒன்று என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்து கோரல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசுக்கு, 16 மாதங்கள் கடந்தும் அதனைச் செய்ய முடியாமல் போயுள்ளது. கடந்த ஏப்ரல் மாதமே பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால், அதனைச் செய்யத் தவறியதால், தற்போது ஏப்ரல் மாதம் நெருங்கும் வேளையில் ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே சுரேஷ் சலேயைக் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைதின் மூலம் ஜனாதிபதி பிரிவினைவாதிகளையும், கத்தோலிக்க மக்களையும் திருப்திப்படுத்த முயல்கின்றார். குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோதும் பிரிவினைவாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே அவர் செயற்பட்டிருந்தார்.

அதேபோன்று, தற்போது நிலக்கரி மோசடி தொடர்பாக அரசின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறைப்பதற்கும், ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாக மக்கள் மீண்டும் அணிதிரள்வதைத் தடுப்பதற்குமே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி ஆணைக் குழுவினால் வழக்குப் பதிவு செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்ட ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரைப் பயன்படுத்தியே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சாரா ஜஸ்மின் தப்பிச் சென்றபோது, கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தவர் தற்போதைய பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர ஆவார். இவர்களையும், தேசியப் பட்டியல் உறுப்பினர் இப்ராஹிமின் மகன்களையும் வைத்துக் கொண்டே இந்த நாடகத்தை அநுர அரசதரப்பினர் அரங்கேற்றுகின்றனர்.

எந்தவொரு நாட்டுத் தலைவரும் தனது நாட்டின் புலனாய்வுத் துறையைப் பலவீனப்படுத்த முயற்சிப்பதில்லை. ஆனால், இந்த அரசு பிரிவினைவாதிகளைத் திருப்திப்படுத்தத் தனது நாட்டின் புலனாய்வுத்துறையையே காட்டிக்கொடுத்துள்ளது. இது யுத்தத்தை வெற்றி கொள்ள உயிர்த்தியாகம் செய்தவர்களின் உறவினர்களைப் புண்படுத்தும் செயலாகும்.” – என்றார்.

# சுரேஷ் சலே கைது ‘சுனாமி’யாக மாறும்!

## அரசுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி. எச்சரிக்கை



அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே தொடர்பில் அரசு மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும், அவரைக் கைது செய்துள்ளதன் மூலம் பாதுகாப்புத் துறைகள் அனைத்தும் வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கின்றது எனவும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்:–

“ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மிகவும் நேர்மையான மற்றும் திறமையான ஓர் அதிகாரி ஆவார். அத்தகைய ஒருவரைத் திடீரெனக் கைது செய்து, அதன் மூலம் அரசு அரசியல் ரீதியான நற்பெயரைப் பெற முயற்சிப்பது அநீதியான செயலாகும். இந்த நடவடிக்கையானது பொலிஸ், இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் மன தைரியத்தைப் பாரியளவில் வீழ்ச்சியடையச் செய்யும்.

சலேயைக் கைது செய்வதன் மூலம் அரசு தப்பித்துக்கொள்ளலாம் என நினைக்கக் கூடாது. அவர் தவறு செய்திருந்தால் அது குறித்து விசாரணை நடத்தித் தண்டனை வழங்குவது வேறு விடயம். ஆனால், அவரை முடிந்தவரை விரைவாக விடுதலை செய்ய வேண்டும். இல்லையெனில், புலனாய்வுத் துறையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி அரசுக்கே பாதிப்பாக அமையும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்துவிட்டன என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பலர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தண்டனை மற்றும் அபராதங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்னும் எவராவது எஞ்சியிருப்பின் அவர்களைக் கண்டுபிடிப்பதில் எமக்குத் தடையேதுமில்லை.

அதேவேளை, கர்தினால் ஆண்டகை இவ்விடயத்தில் மிகுந்த அதிருப்தியில் இருப்பதால், அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுவது நல்லது. ஆனால், சுரேஷ் சலே விவகாரத்தில் அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனெனில் இது மீண்டும் அரசைச் சுற்றியடிக்கும் ஒரு ‘சுனாமி’யாக அமைந்துவிடும்.” – என்றார்.



# ‘பொடி லஸ்ஸி’க்கு 7 நாள்கள் தடுப்புக் காவல்!

## காலி குற்றத் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணை

இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டு, நேற்று வெள்ளிக்கிழமை (27) அதிகாலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவரும் பாரிய அளவிலான போதைப் பொருள் கடத்தல்காரருமான ‘பொடி லஸ்ஸி’ எனப்படும் அருமஹந்தி ஜனித் மதுசங்க டி சில்வாவை 7 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பத்தேகம நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட சந்தேகநபர், மேலதிக விசாரணைகளுக்காக காலி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, நேற்று முற்பகல் சந்தேகநபர் பத்தேகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது, பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை அடுத்த 7 நாள்களுக்குத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய உத்தரவிட்டார்.

இந்தத் தடுப்புக் காவல் காலப்பகுதியில் முன்னெடுக்கப்படும் தீவிர விசாரணைகள் மூலம், பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகள் குறித்த பல முக்கிய தகவல்கள் வெளிவரும் எனப் பொலிஸார் தரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கு: ‘கமாண்டோ சலிந்த’ விளக்கமறியலில்



பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான ‘கணேமுல்ல சஞ்சீவ’ கொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபராகக் கருதப்படும் ‘கமாண்டோ சலிந்த’ என்பவரை, எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தசந்தேகநபர்,பலத்தபாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு மேலதிக நீதிவான் அசங்க எஸ். போதரகமவின் உத்தியோகபூர்வ அறையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, குறித்த கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றங்கள் அடங்கிய அறிக்கையொன்றைக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும் முன்வைக்கப்பட்ட விடயங்களையும் ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய ஏனைய நபர்கள் மற்றும் அதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் குறித்து சி.ஐ.டியினர் தொடர்ந்தும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவகாரம் தூள் பறக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிரணித் தரப்புக்கள் இவ்விவகாரத்தை ஒட்டி இனவாதத்தைக் கிளப்பக் கூடும். ஆனாலும் கூட, விவகாரம் விசாரணை மட்டத்தில் இருப்பதால் இந்தக் கைதின் பின்னணியில் இருக்கும் உள்விடயங்களை நாடாளுமன்ற விவாதத்தில் அரசுத் தரப்பு இப்போதைக்கு வெளியிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இடமில்லை.

இந்தக் கைதுக்கான ஆதாரங்கள், சான்றுகள், சாட்சியங்கள் போதுமான அளவில் இருக்கின்றன என்ற கருத்தை மாத்திரமே நாடாளுமன்ற விவாதத்தின் போது இப்போதைய நிலையில் ஆளுந்தரப்பு முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சுரேஷ் சலே கைதை அடுத்து உடனடியாகப் பிரதிபலிப்பை வெளியிட்ட எதிரணி பிரமுகர்களில் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியும் ஒருவர்.

சலேவுக்காக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு உட்பட ஏனைய சட்ட விடயங்களைக் கையாள்வதற்கு ஓர் உயர்மட்ட சட்டத்தரணி குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வைத்து, அதையே அப்பாவி மக்கள் மீது ஏவிவிட்ட தரப்புகள், இப்போது அந்தச் சட்டத்தின் கொடூரப் பக்கங்களை – அவற்றின் விளைவுகளை – எதிர்கொள்ளும் நிலைமை வந்திருக்கின்றது.

அரசுக்கு எதிரான அரசியல் நெருக்கடிகள், ஊழல் குற்றச்சாட்டுகள், நாட்டில் வறுமை நிலை தீவிரம் போன்றவை களத்தில் மோசமான நிலைமையை ஏற்படுத்தலாம் எனக் கருதி மக்களின் கவனத்தை அவற்றிலிருந்து திசை திருப்புவதற்காகவே இத்தகைய உயர்மட்ட கைது நாடகத்தை அரசாங்கம் அரங்கேற்றுகின்றது என்றும் சில தரப்புக்கள் விளக்கம் கூற முற்படுகின்றன.

போதிய சான்றாதாரங்கள், ஆவணங்கள், சாட்சிகள் கிடைப்பதற்காகப் புலனாய்வாளர்கள் காத்திருந்தனர் என்றும், தமக்குத் தேவையான விடயங்களை சுவீகரித்துக் கொண்ட பின்னரே இந்த கைது நடவடிக்கையை சம்பந்தப்பட்ட புலனாய்வாளர்கள் முன்னெடுத்தனர் என்றும் கொழும்பு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

பிள்ளையானின் உதவியாளராக இருந்த அன்சீர் சாஹிர் மௌலானா மேற்கு நாடு ஒன்றில் தஞ்சம் புகுந்த நிலையில் வெளிப்படுத்திய உள்வீட்டு உண்மைகளே நாட்டின் புலனாய்வுத்துறைத் தலைவர் வரை உள்ள மட்டங்களைக் கைது செய்து, விசாரணை செய்து, நடவடிக்கை மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கின என்பதை மறந்துவிடக்கூடாது.

பிள்ளையான் பக்கத்தில் உள்ள தரப்புகள் அரசு சாட்சிகளாக மாறக்கூடிய சாத்தியங்களையும் வைத்துக் கொண்டுதான் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டு இருக்கும் என்று பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய முன்னாள் மூத்த அதிகாரி ஒருவர் யூகம் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கைதின் பின்னால் உள்ள பல விடயங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை தென்னிலங்கை ஊடகங்களில் மின்னும் என்றும் எதிர்பார்க்கலாம்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மிக நெருக்கடியான அரசியல் சிக்கல்களை எதிர்கொள்கின்றார்.

கட்சிக்குள் அவருக்கு எதிராகக் கிளம்பி இருக்கும் கருத்து நிலைப்பாடு ஒருபுறம். தென்னிலங்கையில் அவர் அரசுடன் சேர்ந்து செயல்படுகின்றார் என்ற கருத்தியலில் கிளம்பி இருக்கும் ஒரு குழுவின் எதிர்ப்பு மறுபுறம்.

இந்த இரண்டையும் அவர் ஒரே சமயத்தில் எதிர்கொள்வது என்பது மிக சிக்கலானதுதான். பல சமயங்களிலும் சிந்திக்கும்போது அவர் குறித்து பச்சாதாபமே ஏற்படுகின்றது.

ஏற்கனவே நான் சுட்டிக் காட்டியமை போல 'பட்ட காலிலே படும்' என்ற கதையாக அவருக்குத் தொடர்ந்து தொல்லைகள் வந்து கொண்டிருக்கின்றன.

அவருக்கு எதிராக லஞ்ச, ஊழல் முறைப்பாட்டு ஆணையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்த சஞ்சய் மாவத்த என்ற நபர் நேற்றும் இன்னொரு முறைப்பாட்டைச் செய்தமை மாத்திரமல்லாமல், பகிரங்க ஊடக மாநாடு ஒன்றையும் நடத்தி, சில அறிவிப்புகளையும் வெளியிட்டு இருக்கிறார்.

ரணில் ஆட்சி காலத்தில் பார் பெர்மிட் பெற்றமை, வன்னியில் காணி ஒதுக்கீட்டுக்கு லஞ்சம் வாங்கியமை, முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்தமை என்று மூன்று அடிப்படையிலான குற்றச்சாட்டுகளை அவர் தொடர்ந்து சிறிதரனுக்கு எதிராக முன்வைத்து வருகிறார். இப்போதும் புதிதாக இவ்விடயத்தில் ஆதாரங்களை லஞ்ச,ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்குத் தான் கையளித்திருக்கின்றார் என்று அவர் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவித்திருக்கிறார்.

தொடர்ந்து சிறிதரனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்தாலும், அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ, அந்தக் குற்றச்சாட்டுகள் விடயத்தில் காத்திரமான நகர்வுக்கு வழி இருப்பதாகவோ லஞ்ச, ஊழல் ஆணைக் குழு அசமாத்தம் கூடக் காட்டவில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் அரசமைப்புக் கவுன்ஸில் மற்றும் விடயங்களில் சிறிதரன், ஆளும் தரப்புக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகிறார் என்று உள்கட்சி மோதலில் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் குற்றம் சுமத்துகின்றன.

சிறிதரனின் இந்த நடவடிக்கையையும் அவருக்கு எதிரான லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படாதமையையும் முடிச்சுப் போட்டு அவரது அரசியல் எதிர்தரப்பினர் பரந்த அளவில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் சிறிதரன் என்ன சமாதானம் சொன்னாலும் – தன்னுடைய கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராக எத்தகைய பிரசாரத்தை முன்னெடுத்தாலும் – இவை தொடர்பில் தம்மை ஆளுமையாக நிலை நிறுத்த வேண்டுமானால் அவர் ஒரு விடயத்தை தெளிவாகவும் வெளிப்படையாகவும் செய்தாக வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

வெறுமனே அரசுக்கு எதிராக – தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாக – நாடாளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ வாய்ச்சவடால் பேச்சு பேசுவதில் அர்த்தமில்லை.

அரசமைப்பு கவுன்ஸிலிலும் வெளியிலும் அரசுக்கு ஆதரவாக அவர் செயல்படுகிறார், அவருக்கு எதிரான பல பிடிகள் ஆளும் தரப்பிடம் இருப்பதால் ஆளும் தரப்புக்கு அவர் வளைந்து கொடுக்கிறார், மசிந்து செயல்படுகிறார் என்றெல்லாம் அவரது அரசியல் எதிரிகள் முன்வைக்கும் பிரசாரத்திற்கு எதிராகக் காத்திரமான அரசு எதிர்ப்பு செயற்பாடுகளை அவர் நடைமுறையில் செய்து காட்ட வேண்டும்.

அதைச் செய்தால் மாத்திரமே இப்போதுள்ள நிலையில் அவர் அரசியலில் மீண்டெழ முடியும் என்று நான் நினைக்கிறேன்.

இவ்விடயத்தில் தேவைப்படுவது தமிழ் தேசியத்தை முன்னிறுத்தும் வாய்ச்சவடால் பேச்சுக்கள் அல்ல. அரசுக்கு எதிரான – அரசை நெருக்கடியில் ஆழ்த்துகின்ற – காத்திரமான நடவடிக்கைகளை அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து அதனை அவர் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த ஆலோசனை அவர் மீதான காழ்ப்புணர்வினால் முன்வைக்கப்பட்டது அல்ல என்பதையும், அவர் கவனத்தில் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

---

## அடுத்த இலக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற "சுரேஷ் சலே என்ன செய்தார்?" என்ற தலைப்பிலான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:–

"மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை அநுர தலைமையிலான அரசு ஆரம்பித்துள்ளது. இந்த அரசு திட்டமிட்ட முறையில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை மிக அழகாக அரங்கேற்றி வருகின்றது.

சுரேஷ் சலேயின் கைது மூலம் அவர்களின் அடுத்த இலக்கு கோட்டாபய ராஜபக்ஷவே என்பது தெளிவாகின்றது. ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட சஹ்ரான் ஹாஷிம், ஒரு தீவிர சிங்கள பௌத்த தலைவராகக் கருதப்படும் கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவிக்குக் கொண்டு வருவதற்காகத் தனது உயிரைத் தியாகம் செய்வாரா? இது முற்றிலும் முட்டாள்தனமான வாதமாகும்.

புலனாய்வு அதிகாரிகள் சஹ்ரான் அல்லது பிரபாகரன் என யாராக இருந்தாலும், நாட்டின் பாதுகாப்பு கருதி அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவது இயல்பானது. சஹ்ரானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் கிடைத்த வுடனேயே அவரைக் கண்காணிக்கத் தொடங்கியது புலனாய்வுப் பிரிவினர் தான் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே இவ்வாறான துரோகச் செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அரசின் இத்தகைய நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகும்." – என்றார்.


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
media network
MURASU
digital
tamil one

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உயர்மட்டக் கைது!

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நாட்டின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜென்ரல் சுரேஷ் சலேயைத் தொடர்ந்து 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான தடுப்பு காவல் உத்தரவைப் பொலிஸார் பெற்றிருக்கின்றனர் என்று நேற்று இரவு அறிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலையில் கைது செய்யப்பட்ட அவர், உடனடியாக 72 மணி நேரத் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

அந்தத் தடுப்பு காவல் இன்று காலை முடிவடைய இருக்கின்ற நிலையிலேயே, அடுத்த 90 நாள்களுக்கு - அதாவது மூன்று மாதங்களுக்கு - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவரைத் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான தடுப்பு காவல் உத்தரவை பொலிஸார் பெற்றிருக்கின்றனர். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை, தேவையான காலத்துக்கு இந்தத் தடுப்புக் காவல் உத்தரவை நீடிக்க முடியும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியின் அனுமதியுடனேயே இப்போது இந்த முதலாவது மூன்று மாத காலத் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டிருக்க முடியும்.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேக்கு எதிராகக் காத்திரமான குற்றச்சாட்டுகளும், பலமான சந்தேகங்களுக்கு உரிய காரணங்களும் இல்லாமல் இத்தகைய தடுப்புக்காவல் உத்தரவு ஒன்றை அத்தகைய உயர் பதவி வகித்த ஒருவருக்கு எதிராக நிச்சயமாக ஜனாதிபதி அனுமதித்திருக்க மாட்டார் என்பது தெளிவானது.

யுத்தத்தின்போது நாட்டின் பாதுகாப்புப் பிரிவில் மிக முக்கிய நபராகச் செயல்பட்டவர் சுரேஷ் சலே. யுத்தம் தொடர்பான பல உள் வீட்டு உள்ளார்ந்தங்களும் இரகசியங்களும் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான பல விடயங்களும் தெரிந்த ஒருவராக அவர் நிச்சயம் இருப்பார். அத்தகையவரைக் கைது செய்து, 90 நாள்கள் வரை அல்லது அதையும் தாண்டி, பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தில் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்வது என்பது மிக உயர்ந்த பட்ச நடவடிக்கையாகும். பாதுகாப்புத் தொடர்பான இரகசியங்கள், உள் விடயங்கள் தெரிந்த ஒருவரை இவ்வாறு சீண்டும் விடயத்தில் கனகாத்திரமான காரணங்கள் இல்லாமல் விடயங்கள் நகர்த்தப்பட மாட்டா என்பது ஊகிக்கத்தக்கதே.

இவரைக் கைது செய்ததன் காரணமாக அவர் மூலமே பல பின்புல விளைவுகள் நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளும் உண்டு. அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துத்தான் இந்த கைது நடவடிக்கையையும் தடுப்பு காவல் உத்தரவையும் அரசு முன்னெடுத்து இருக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேக்கு எதிரான விசாரணைகள் தீர்க்கமான கட்டத்தை நோக்கி நகருமானால் அதற்கு அப்பாலும் பல பிரமுகர்கள் கைதாகக் கூடிய சாத்தியங்கள் நேரலாம். அப்போது நாட்டின் நிலைமை பதற்றத்துக்கும் கொந்தளிப்புக்கும் கூட உள்ளாகும் வாய்ப்புகள் உண்டு.

சுமார் 275 பேரின் உயிர்களைக் காவு கொண்டு ஐந்நூறுக்கு மேற்பட்டோரைப் படுகாயங்களுக்கு உட்படுத்தி, மோசமான பேரழிவை ஏற்படுத்திய ஒரு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் போது எந்த மட்டம் வரை நடவடிக்கை எடுக்கவும் தயங்கக் கூடாது. அதனைத்தான் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசு கவனத்தில் கொண்டிருக்கின்றது என்பதும் நோக்கப்பட வேண்டும்.




# கிராம உத்தியோகத்தர்கள் போராட்டம் ஒத்திவைப்பு

## அமைச்சின் உறுதிமொழியால் தீர்மானம்

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு முன்னால் மார்ச் 3 ஆம் திகதி நடத்தப்படவிருந்த அமைதிப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெற்ற கிராம உத்தியோகத்தர்களே இந்த போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தனர்.

எனினும், கிராம உத்தியோகத்தர்களுக்கும், அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை உரிய அமைச்சருடன் கலந்துரையாடி, அடுத்த ஒரு வாரத்திற்குள் எழுத்துப்பூர்வமான தீர்வை வழங்குவதாக அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

அமைச்சின் இந்த இணக்கப்பாடு காரணமாக மார்ச் 3 போராட்டத்தை தற்காலிகமாக ரத்து செய்வதாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெற்ற கிராம உத்தியோகத்தர்களின் அமைப்பின் ஊடகச் செயலாளர் குமுது வடுமுல்ல தெரிவித்துள்ளார்.

ஆனால், அடுத்த ஒரு வாரத்திற்குள் தீர்வு கிடைக்காவிட்டால், மார்ச் 16 ஆம் திகதி அமைதிப் போராட்டத்திற்குப் பதிலாக பாரிய அளவிலான தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்பதாகவும் எச்சரித்துள்ளனர்.

### மார்ச் 3ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளன என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமர்வு நடைபெறும் நாள்களில் மேற்கொள்ளப்படவுள்ள பிரதான நடவடிக்கைகள் வருமாறு:-

மார்ச் 4 ஆம் புதன்கிழமை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

மார்ச் 5 ஆம் திகதி வியாழக்கிழமை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண்களுக்கு எதிரான சவால்கள் மற்றும் உரிமைகள் குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமை தொடர்பிலும் சபையில் விசேட விவாதங்கள் இடம்பெறவுள்ளன. இது குறித்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### சுரேஷ் சலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கியுள்ளது.

பிரித்தானியாவின் “சானல் 4“ தொலைக்காட்சிவெளியிட்டசர்ச்சைக்குரிய ஆவணப்படத்தில், ஈஸ்டர் தாக்குதலுக்கும் சுரேஷ் சலேவுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருப்பதாகப் பாரிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, “சமூக மற்றும் சமய நிலையத்தின்“ நிறைவேற்றுப் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய ரொஹான் டி சில்வா அடிகளார் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2019 ஏப்ரல் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற போது சுரேஷ் சலே மலேசியாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றி வந்தார். கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவர் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2024 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, தற்போதைய அரசினால் அவர் பதவியிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டார்.

கடந்த 2024 நவம்பர் மாதம் கோட்டை நீதவான் நீதிமன்றில் இந்த விவகாரம் தொடர்பான முன்னேற்றங்களை அறிவித்திருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம், சுரேஷ்சலே தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகத் தெரிவித்திருந்தது. அந்தத் தொடர்ச்சியான விசாரணைகளின் ஒரு கட்டமாகவே தற்போது இந்த அதிரடி கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்த 90 நாள்கள் தடுப்புக் காவல் விசாரணையின் மூலம், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சதிகாரர்கள் மற்றும் மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிவரும் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் பலத்த எதிர்பார்ப்பில் உள்ளனர்.



| வில் ஜாக் | | | |
|---|---|---|---|
| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
| 32 | 18 | 01 | 04 |

## நியூஸிலாந்தின் அரையிறுதி வாய்ப்புக்கு

# செக் வைத்தது! இங்கிலாந்து

நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, அந்த அணியின் அரையிறுதி வாய்ப்புக்கு 'செக்' வைத்துள்ளது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 8 ஆட்டம் ஒன்று நேற்றிரவு கொழும்பில் நடந்தது.

இதில் நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் ஆடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களைச் சேர்த்தது.

கிளென் பிலிப்ஸ் 39 ஓட்டங்களையும், டிம் சைபர்ட் 35 ஓட்டங்களையும், பின் ஆலன் 29 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இங்கிலாந்து சார்பாக பந்துவீச்சில் அடில் ரஷித், வில் ஜாக்ஸ், ரேஹான் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர், 160 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. டாம் பாண்டன் 33 ஓட்டங்களையும், ஹறி புரூக் 26 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

கடைசி 3 ஓவர்களில் வெற்றிபெற 43 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரெஹான் அகமது அதிரடியாக ஆடி சிக்ஸர், பௌண்டரிகளாக விளாசிச் சென்றார்.

இறுதியில் இங்கிலாந்து 19.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 161 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றி பெற்றது.

அதிரடியாக ஆடிய வில் ஜாக்ஸ் 18 பந்துகளில் 32 ஓட்டங்களையும், அகமது 7 பந்துகளில் 19 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழக்கமல் களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து சார்பாக பந்துவீச்சில் ரச்சின் ரவீந்திரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் வில் ஜாக் தெரிவானார்.

இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, சுப்பர் - 8 சுற்றில் எந்தவொரு தோல்வியையும் அடையாமல் அரையிறுதியில் மோதக் காத்திருக்கின்றது.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் நியூஸிலாந்தின் அரையிறுதி வாய்ப்புக் கேள்விக்குறியாகியுள்ளது.

இன்று நடைபெறும் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி மிகப்பெரிய வெற்றிபெறும் பட்சத்தில் நியூஸிலாந்தின் வாய்ப்பு கேள்விக்குறியாகும். அதேவேளை இலங்கை வென்றால் நியூஸிலாந்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றுவிடும்.

### ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

#### குழு 02 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.096 |
| நியூஸிலாந்து | 3 | 1 | 1 | 0 | 1 | 3 | 1.390 |
| பாகிஸ்தான் | 2 | 0 | 1 | 0 | 1 | 1 | -0.461 |
| இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.800 |

## ரி-20 உலகக் கிண்ணம் 'சுப்பர்-8': இன்றைய போட்டி

ICC MEN'S T20 WORLD CUP INDIA & SRI LANKA 2026

| குழு-02 | | | |
|---|---|---|---|
| இலங்கை | எதிர் | பாகிஸ்தான் | சனி 28 பெப் 7 இரவு |

பல்லேகல இலங்கை







# பிரதம நீதியரசர் நேற்று வவுனியாவிற்கு விஜயம்: நீதிமன்றச் செயற்பாடுகளையும் பார்வையிட்டார்

(கி.வசந்தன்)

இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உத்தியோக பூர்வ பயணமாக வடக்குக்கு விஜயம் செய்தார். அவர் நேற்று வவுனியா நீதிமன்றத்திற்கு சென்று மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள், நீதிமன்ற ஆவணப்பகுதிகள் என்பவற்றைப் பார்வையிட்டார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அ.அ.ஆனந்தராஜா மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து பிரதம நீதியரசரை வரவேற்றனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதம நீதியரசர் –

வவுனியாவில் நீதிமன்ற செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன.சான்றுப் பொருள்களை விரைவாக அவற்றை நினைவுபடுத்தி அழித்தல், விரைவாக முடிவுறுத்தல் போன்ற செயல்பாடுகளில் உத்தியோகதாதர்கள் கடமைநேரங்களுக்கு மேலதிகமான நேரங்களை எடுத்து திறமையாகச் செயல்பட்டிருக்கின்றார்கள் இது சிறந்த விடயம். – எனத் தெரிவித்து அவர்களுக்கு பராட்டுத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பிரதம நீதியரசர் பதவி ஏற்ற. முதலாவது விஜயமாகக் கண்டிக்குச் செறேன். நாட்டில் ஏற்பட்ட டிப்பாபுயலால் காரணமாக கண்டி நீதிமன்ற வளாகம் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது. நேரடியாக சென்று பார்வை இட்டமையுடன் அவர்களுடைய நீதிமன்ற செயல்பாடுகளுக்கு உடனடியான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தேன்.

இனி வரும் காலங்களில் அனைத்து நீதிமன்ற நடைமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டும். நான் சமீபத்தில இந்தியாவுக்கு விஜயம் செய்து அங்குள்ள நீதிமன்ற செயல்பாடுகள், கட்டமைப்புக்கலைப் பார்வையிட்டேன். மிகவும் சிறப்பாக இருந்தன. அதேபோல் எமது நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தையும் அபிவிருத்தி அடைந்த நாட்டு நீதிமன்றங்கள் போல் செயல்பாடுகள், கட்டமைப்புக்கள் நடைமுறைபடுத்தப்பட வேண்டும். அத்துடன் அதற்க்கு ஏற்றால் போல் நீதிமன்றங்களை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கவேண்டும். எதிர்காலச் செயல்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும்.

வவுனியா நீதிமன்றம் போல் தமிழ. – சிங்களம் என்ற பாகுபாடற்று வட பகுதியில் உள்ள எல்லா நீதிமன்றங்களும் செயல்பட வேண்டும்.

நான் தென்பகுதி, வடபகுதி, தமிழ், சிங்களம் என்ற எந்தப் பாகுபாடு பார்ப்பதில்லை. எமது நாடு, எமது நீதிமன்றங்கள் என்ற ஒரேகொள்கையுடன் செயல்படுகிறேன். அதற்கு உதாரணமாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவில் நடைபெற்ற ஒரு சிறந்த பயிற்சிப்பட்டறைக்காக மல்லாகம் நீதிமன்ற நீதிபதியையும், யாழ்ப்பாண நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இருவரையும் தெரிவுசெய்து அனுப்பியிருந்தேன். நான் அனைவரையும் ஒரு மாதிரியாகவே நடத்துகின்றேன். – என்றார்










# விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவை அதிகரிக்கக் கோருகின்றார் சாணக்கியன் எம்.பி.!

**(ஜதுர்சயன்)**

விசேட தேவையுடையோருக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

இயலாமையுள்ள நபர்களை உள்ளடக்கிய சேவை வழங்கலை மேம்படுத்துவது தொடர்பான மாவட்ட மட்டக் கலந்துரையாடல் இன்று மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்று திறனாளிகளுக்கான சேவைகளை வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்றக் குழுத்தலைவர் சுகத் வசந்த டி சில்வா, குழுவின் இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான கந்தசாமி பிரபு, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், இராசமாணிக்கம் சாணக்கியன், இளைய தம்பி சிறிநாத், உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி சந்திரகலா கோணேஸ்வரன், அரச உயர் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், சமூகசேவை உத்தியோகத்தர் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் விசேட தேவையுடையோர் உள்ளிட்ட பலரின் பங்கு பற்றுதலுடன் இடம் பெற்றது.

மாற்றுத் திறனாளிகளுக்கான நாடாளுமன்றக் குழுத்தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்கு அமைவாக நாடு முழுவதும் உள்ள மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், தேவைகளை ஆதரித்தல் மற்றும் விரிவான சட்டமன்றக் கொள்கை சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் முதலானவற்றை மையமாகக் கொண்ட மாவட்ட மட்டக் குழு இதன்போது அமைக்கப்பட்டது.

மாற்று திறனாளிகளுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக நாடளாவிய ரீதியில் மூன்றாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்று திறனாளிகளுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளை நேரடியாக கலந்துரையாடி அதுதொடர்பான விடயங்களைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் மாவட்ட ரீதியான கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9000 மேற்பட்ட மாற்று திறனாளிகள் உள்ளனர். 14 மாற்றுதிறனாளி சங்கங்கள் செயற்பட்டு

தொடர்ச்சி▼









# விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவை அதிகரிக்கக் கோருகின்றார் சாணக்கியன் எம்.பி.!

தொடர்ச்சி▲

வருகின்றன.

நேற்றைய கலந்துரையாடலில் சாணக்கியன் மேலும் கூறியவை வருமாறு:–

இயலாமையுள்ள நபர்கள் தொடர்பாக நாடாளுமன்ற ஒன்றியம் முன்னெடுத்து வரும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வரவேற்கின்றேன். நாடு முழுவதும், கிராமந்தோறும் உள்ள விசேட தேவையுடையோரின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லும் திறன் இவ்வொன்றியத்துக்கு உள்ளது. எனவே, எதிர்வரும் காலங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய சில விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு கடந்த காலத்தை விட தற்போது அதிகரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. இது வரவேற்கத்தக்கது. எனினும், இலங்கை இறக்குமதிகளை அதிகம் சார்ந்த நாடாக இருப்பதாலும், தற்போதைய பணவீக்கம் காரணமாக வழங்கப்படும் தொகை அவர்களுக்கு போதுமானதா என்பதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9,235 விசேட தேவையுடையோர் உள்ளனட் எனவும், அதில் 8,712 பேர் தற்போது கொடுப்பனவு பெறுகின்றனர் எனவும், மீதமுள்ளவர்களில் 152 பேருக்குக் கொடுப்பனவு பெற தகுதி உள்ளதாக மாவட்ட சமூக சேவை திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உதாரணமாக, மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் சுமார் 1,258 விசேட தேவையுடையோர் உள்ளனர் என அறியப்படுகிறது. ஆனால், இங்கு 930 பேருக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மீதமுள்ளவர்கள் உண்மையில் தகுதியற்றவர்களா என்பதை மீளாய்வு செய்ய வேண்டும். இதுபோன்ற நிலைமை மாவட்டத்தின் பிற பிரதேசங்களிலும் இருக்கக்கூடும்.

எனவே, அனைத்து விவரங்களையும் முழுமையாக மீளாய்வு செய்து, தகுதியுள்ள அனைவருக்கும் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தற்போது ரூபாய் 10,000 ஆக வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக எதிர்வரும் வரவு – செலவுத்திட்டத்தில் முன்மொழிவு செய்து, அதற்கான அழுத்தத்தை சம்பந்தப்பட்ட தரப்புகள் வழங்க வேண்டும்.

அதேவேளை, சிலர் கொடுப்பனவை பெறுவதற்காக அதிக கட்டணம் செலுத்தி முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே, இக் கொடுப்பனவை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் வகையில் பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைந்து செயற்படும் நடைமுறையை அறிமுகப்படுத்த நாடாளுமன்ற ஒன்றியம் பரிந்துரை செய்ய வேண்டும். – என்றார் இரா.சாணக்கியன்.









# புதுச் செட்டித் தெரு சீரடி சாயி மத்திய நிலையத்தின் செயற்பாட்டறிக்கை சாயி சந்நிதானத்தில் சமர்ப்பிப்பு

கொழும்பு புதுச் செட்டித் தெரு சீரடி சாயி (இலங்கை) மத்திய நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமய, சமூக சேவைத்திட்டங்கள் பற்றிய வருடாந்த அறிக்கையை, வட இந்திய மகாராஷ்டிரவில் உள்ள சீரடி சாயி மகா சந்நிதானத்தில் வைபவரீதியாக சமர்ப்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இலங்கை சீரடி சாயி நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகன், மேற்படி அறிக்கையை மகாராஷ்டிர சீரடி மகா சந்நிதான பிரதானியான கொரக்ஷ கடீல்கர்(ஐ.எஸ்.ஏ) அவர்களிடம் கையளித்த பின்னர், அவரை வாழ்த்தி கௌரவித்தார்.



# வடமராட்சி கிழக்கு மண்டலாய்க் காட்டுப் பகுதியில் யானை ஒன்று திசை மாறி வந்துள்ளாதாகத் தகவல்

**(பூ.லின்ரன்)**

யாழ் வடமராட்சி கிழக்கு மண்டலாய் காட்டுப் பகுதியில் யானை ஒன்று திசை மாறி வந்துள்ளது எனத் தெரிவிக்க்ச்ப் பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் மிகவும் கவனமாக தமது பயணங்களை மேற்கொள்ளுமாறு ஊர் மக்களால் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது இது தொடர்பாக உரிய தரப்பிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்றும், யானையை பாதுகாப்பாக அகற்றுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.





# வட்டவான் வடபத்திரகாளியம்மனின் வருடாந்த வேள்வி உற்சவம் நேற்று

(உடப்பு நிருபர்:க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வட்டவான் அருள்மிகு ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவம் நேற்று வெள்ளிக் கிழமை காலை இடம்பெற்றது.

ஆலயத்தில் வேள்விக் கரகத்தை 'குருசாமி' காசிலிங்கம் பார்த்தசாரதிமூர்த்தி சுமந்த வண்ணம் அருள்பாலித்தார். பிரதான கரகம், சகபாடிகளுடன் வீதியில் கும்மி நடனத்துடன் வலம் வந்தது. பின்னர் மஞ்சள் நீராடல் இடம் பெற்று பிரதான பொங்கல் பானை ஏற்றப்பட்டு, பக்தர்களினால் பொங்கலும் இடம் பெற்றது.மேலும் பெண்களினால் முளைக் கொட் டும் நிகழ்வும் இடம்பெற்றது. இதில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

















# முன்னாள் அமைச்சர்கள் மேர்வின் சில்வா, பிரசன்ன உள்ளிட்டோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் அமைச்சர்களான மேர்வின் சில்வா மற்றும் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான காணியொன்றை போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்போது மேல் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் இருவர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான குற்றப்பத்திரிகைகள் வாசிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களைத் தவிர சரத் எதிரிசிங்க, அஜித் மில்ரோய், ஜயந்த கப்ரால் மற்றும் நவீன் வீரகோன் ஆகியோருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அனைத்து பிரதிவாதிகளையும் பிணையில் விடுவித்த கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை மீண்டும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிட்டார்.



# டித்வா ஏற்பட்டு 3 மாதங்கள் நிறைவு: 173 பேரை இன்னும் காணவில்லை

இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளியினால் நாட்டுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு நேற்றுடன் மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன.

எனினும், காணாமல் போன 173 பேரை, இதுவரையிலும் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி, இலங்கையின் தென் கடற்பரப்பில் உருவான குறைந்த அழுத்தம் நவம்பர் 27 ஆம் திகதி சூறாவளியாக மாறியது. அந்தச் சூறாவளிக்கு டித்வா எனப் பெயரிடப்பட்டது.

இந்த சூறாவளியினால் நாட்டின் 22 மாவட்டங்களுக்கு கடும் பாதிப்புகள் ஏற்பட்டதுடன், சுமார் 650 பேர் உயிரிழந்தனர்.

இதுவே, இலங்கை வரலாற்றில் இயற்கை அனர்தத்தினால் ஏற்பட்ட அதிகூடிய உயிரிழப்பாக பதிவாகியுள்ளது.

டிட்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 150 குடும்பங்கள் இன்றும் 41 பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ளன.

வீடுகளை இழந்த மேலும் 43 ஆயிரத்து 831 குடும்பங்கள், வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

டிட்வா சூறாவளியினால் கட்டடங்கள், அவற்றிலுள்ள பொருள்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள நேரடி சேதம் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.



# 45 தற்காலிக மையங்களில் தங்கியுள்ள 1,332 குடும்பங்கள்

இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளி மற்றும் நிலச்சரிவுகளினால் இடம்பெயர்ந்த 1,332 குடும்பங்களைச் சேர்ந்த 4,729 நபர்கள் தற்போதும் 45 தற்காலிக பாதுகாப்பு மையங்களில் தங்கியுள்ளனர் என அண்மைக்கால ஆய்வு அறிக்கை ஒன்று சுட்டிக்காட்டுகிறது.

சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்புமற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் மூலம் முகாம்களில் உள்ள குறைபாடுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

தற்போது பதுளை, கேகாலை, நுவரெலியா, கொழும்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள், கோவில்கள் மற்றும் பொதுக் கட்டடங்களில் மக்கள் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்களில் பெண்கள் 27 வீதம், ஆண்கள் 25 வீதம், சிறுவர்கள் (18 வயதிற்குட்பட்டோர்) 26 வீதம், முதியவர்கள் 14 வீதமாகவும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களில் உள்ள கழிவறை வசதிகள் சர்வதேச தரத்தை விட குறைவாகக் காணப்படுகின்றன.

ஒரு கழிவறையை சராசரியாக 23 நபர்கள் பயன்படுத்துகின்றனர். அத்துடன், மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட வசதிகள் கொண்ட கழிவறைகள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன.

சுமார் 35 வீதமான முகாம்களில் வன்முறைகள் அல்லது துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ரோந்துப் பணிகள் அல்லது முறையான விதிகள் இல்லை.

பாலூட்டும் தாய்மார்களுக்கான பிரத்தியேக இடவசதிகள் 27 வீத முகாம்களில் மட்டுமே உள்ளன.

64 வீத இடங்களுக்கு சுகாதார ஊழியர்கள் வருகை தந்தாலும், 40 வீத முகாம்களில் மட்டுமே முதலுதவி பெட்டிகள் உள்ளன.

சுமார் 25 வீத முகாம்களில் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுவதுடன், உளவியல் ரீதியான ஆலோசனைகள் பாதிக்கும் மேற்பட்ட முகாம்களில் வழங்கப்படுவதில்லை.

முகாம்களில் தங்கியுள்ளவர்களில் 1 வீத மாற்றுத்திறனாளிகள் எனினும், 60 வீத முகாம்கள் அவர்கள் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைக்கப்படவில்லை.

பெரும்பாலான முகாம்கள் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களில் உள்ள சில முகாம்கள் இன்னும் மூன்று மாதங்களுக்கு மேல் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீண்டும் வழமைக்குத் திரும்ப வேண்டியுள்ளதால், மக்களை மீளக் குடியேற்றும் திட்டங்களை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டிய தேவையுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# பாதணி வவுச்சர்களின் செல்லுபடி காலம் நீடிப்பு

2026 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள், பிரிவெனாக்களில் கல்வி பயிலும் இல்லற மற்றும் துறவற மாணவர்கள் மற்றும்சீலமாதாக்களுக்கு3,000ரூபாபெறுமதியான பாதணி வவுச்சர்களை வழங்கும் திட்டத்தின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மேற்படி வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த போதிலும், தற்போது அதன் செல்லுபடியாகும் காலம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



# தடையின்றி நிவாரணப்பணி இடம்பெற வேண்டும்: தொழிற்சங்க நடவடிக்கை குறித்து சஜித் வலியுறுத்தல்

‘டித்வா’ சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள், உள்நாட்டுத் தர்க்கங்களினால் தடைப்படக் கூடாதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் உதவிக்காகக் காத்திருக்கும் நிலையில், ஒருங்கிணைப்புப் பணிகளில் குழப்பம் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது என சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

“அரசாங்கம் களத்திலுள்ள அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி, ஒருங்கிணைப்பையும் தடையற்ற ஆதரவையும் உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் உதவிக்காகக் காத்திருக்கும் நிலையில், இவ்வாறான குழப்பங்களை எவ்வாறு அனுமதிக்க முடியும்?.” என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், நிவாரணப் பணிகள் எக்காரணம் கொண்டும் தாமதிக்கப்படக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேரிடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகள் மற்றும் கிராமசேவகர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள், நேற்று முதல் பணிகளில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ள பின்னணியிலேயே சஜித் பிரேமதாஸ இந்தத் தகவலை முன்வைத்துள்ளார்.



# க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறை பரீட்சை திகதி அறிவிப்பு

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறை பரீட்சைகளுக்கான திகதிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நாடு முழுவதும் பொறியியல் தொழில்நுட்பப் பாடத்தின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நடனம், பரதநாட்டியம், சங்கீதம் மற்றும் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

மேற்கத்திய இசை, சிங்களம், ஆங்கிலம் மற்றும் நாடகம் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதன்படி, பாடசாலை விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.




# சாந்தனின் 2 ஆம் ஆண்டு நினைவேந்தலும் வழிபாடும்

இந்தியாவின் முன்னால் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வளக்கில் குற்றம் சாட்டப்பட்டு 32 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டு இந்திய உச்ச நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட போதிலும் தமிழக சிறையில் தீவிர நோய் பாதிப்பிற்குள்ளாகி சாவடைந்திருந்த சாந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எள்ளங்குளத்தில் இடம்பெற உள்ளது.

அதிக காலம் சிறையிருந்து சிறைக்குள் மரணித்து பள்ளிப்படையாக உள்ள சாந்தனின் 2 ஆம் ஆண்டை முன்னிட்டு அவரது துயிலாலயத்தில் நினைவு கூறலும் வழிபாடும் எள்ளங்குளம், இந்து மயானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெற உள்ளது.


தமிழர் மரபு வழிந்த “பள்ளிப்படை” வழிபாட்டில், தாயகத்தில், வழிபாட்டில் உள்ள ஒரே ஒரு பள்ளிப்படையாக சாந்தன் துயிலாலயம் ஆமைந்துள்ளது.

பள்ளிப்படை என்பது ஒரு வீரன் மரணிக்கும் போது. அவனது சமாதியில் அல்லது அவனது சாம்பலின் மேல், அவன் குல தெய்வமாக வழிபட்ட தெய்வத்தை பிரதிட்டை செய்து வணங்குவதாகும். பண்டைய தமிழர் மரபில் இருந்து தொடரும் இம்முறையில் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் பல கோயில்கள் இந்தியாவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.











# 15 ஆவது ‘ஜனசக்தி லைஃப் இந்துக்களின் பெருஞ்சமர்’: இந்துக் கல்லூரிகளின் வரலாற்று சமர் மீண்டும் ஆரம்பம்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் வரலாற்றில் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ள, இந்துக் கல்லூரி கொழும்பு மற்றும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 15 ஆவது “ஜனசக்தி லைஃப் இந்துக்களின் பெருஞ்சமர்” மாபெரும் கிரிக்கெட் போட்டி மீண்டும் களைகட்டவுள்ளது.

இம்முறை போட்டியை நடத்தும் இந்துக் கல்லூரி கொழும்பு, தனது 75 ஆவது ஆண்டு நிறைவை (பவள விழா) கொண்டாடும் வேளையில் இப்போட்டி நடைபெறுவது கூடுதல் சிறப்பம்சமாகும்.

இப்போட்டியானது வரும் மார்ச் மாதம் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் கொழும்பு பி. சரா ஓவல் சர்வதேச மைதானத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக இப்போட்டிக்கு ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி தலைமை அனுசரணை வழங்குகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அந்நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரவி லியனகே, இலங்கையர்களின் கனவுகளை நனவாக்குவதே தமது நோக்கம் என்றும், இளம் சந்ததியினரின் ஆளுமையை வளர்ப்பதில் விளையாட்டு முக்கிய பங்கு வகிப்பதனால் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கிரிக்கெட் போட்டியுடன் இணைந்திருப்பதில் பெருமிதம் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் Avenierr Pharma, Star Gold, 747 Auto Parts, IDMNC International மற்றும் Mode Engineering ஆகிய நிறுவனங்களும் இப்போட்டிக்கு தமது ஆதரவை வழங்குகின்றன.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இந்துக் கல்லூரி கொழும்பின் அதிபர் திரு. இளையதம்பி இளங்கேஸ்வரன், கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவில் இந்த பெருஞ்சமர் நடைபெறுவது மகிழ்ச்சியளிப்பதாகவும், இரு கல்லூரிகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தவும் மாணவர்களிடையே சிறந்த ஒழுக்கத்தையும் விளையாட்டுத் திறனையும் வளர்க்கவும் இது ஒரு சிறந்த தளமாக அமையும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ரத்னம் செந்தில்மாறன் தனது வாழ்த்துச் செய்தியில், வடக்கு மற்றும் மேல் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு முன்னணி பாடசாலைகளுக்கு இடையிலான இந்தப் போட்டி, பிராந்தியங்களுக்கு இடையிலான ஒற்றுமையின் அடையாளமாகும் எனக்குறிப்பிட்டதுடன், இதற்குஆதரவளிக்கும் ஜனசக்தி நிறுவனத்திற்குத் தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இம்முறை போட்டியில் இராமநாதன் தேஷ்கர் தலைமையில் களமிறங்கும் இந்துக் கல்லூரி கொழும்பு அணிக்கு முத்துக்குமார் அபிஷேக் உப தலைவராகவும், சுரேஷ் குமார் மிதுஷேகன் விக்கெட் காப்பாளராகவும் செயற்படுகின்றனர். இவர்களுடன் திவாகரன் யாதவ், விஸ்வநாதன் யுவராஜ், செந்தில் குமார் ஹர்ஷ மிதுமின, தவக்குமார் சந்தோஷ், ரஞ்சித் குமார் அகிலேஷ், சுரேஷ் சர்விஷ், கோடீஸ்வரன் யசூர்ஜன், கோபாலகிருஷ்ணன் தூயவன், சத்திய சீலன் சபேஷன், சௌந்தரராஜன் ஆகாஷ், ரவிராஜா தக்ஷேஸ், சசிகுமார் சதுர்ஷன் மற்றும் வெள்ளத்துரை அபினேஷ் ஆகியோர் அணியில் இடம்பெறுள்ளனர். இவ்வணிக்கு எஸ். கோபிநாத் பயிற்சியாளராகவும், கே. ரஜீவ்காந்த் பொறுப்பாசிரியராகவும் செயற்படுகின்றனர்.

மறுபுறம், எஸ். சுபர்ணன் தலைமையில் களமிறங்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணிக்கு எஸ். ஹரிகரன் உப தலைவராகவும், ஆர். ஆதித்யன் விக்கெட் காப்பாளராகவும் பொறுப்பேற்றுள்ளனர்.

அணியின் ஏனைய வீரர்களாக எஸ். செல்வேஜன், கே. நித்தீஸ், டி. பிரேமிகன், ஜே. பவனன், என். நேருஜன், எஸ். அபிவர்ணன், எம். டானிலாஷ், கே. துவாரகன், எஸ். அஸ்வின், பி. அனிஷ், எஸ். சிவகஜீசன், டி. பிரீத்திகன் மற்றும் ஜி. லக்ஸிகன் ஆகியோர் களம் காண்கின்றனர். இவ்வணிக்கு எஸ். அலன்ராஜ் பயிற்சியாளராகவும், டி. தயாபாலன் பொறுப்பாசிரியராகவும் வழிகாட்டுகின்றனர்.

பழமை வாய்ந்த இந்த இரு கல்வி நிறுவனங்களின் கௌரவத்திற்காக நடைபெறும் இப்போட்டியைக் கண்டு களிக்க பழைய மாணவர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.









# முதலாவது சர்வதேச சைவசித்தாந்த ஆய்வு மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்புற ஆரம்பமானது

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவசித்தாந்தத் துறையும், உயர் பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடத்தும் முதலாவது சர்வதேச சைவசித்தாந்த ஆய்வு மாநாடு - 2026 நேற்று வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கூவர் கலையரங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி தலைமையில் சிறப்புற ஆரம்பமானது.

மாநாட்டின் ஆரம்பநாள் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றல், நந்திக் கொடியேற்றல் மற்றும் திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்பமான நிகழ்வில் சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் பேராசிரியர் நல்லூர் சா.சரவணன் நிகழ்நிலையில் கலந்து கொண்டு ஆதார சுருதி உரை ஆற்றினார்.

மாநாட்டின் முக்கிய அம்சமாக ஆய்வரங்கக் கட்டுரைக் கோவையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா வெளியிட்டு வைக்க, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து சமகாலத்தில் சைவம் மற்றும் சைவசித்தாந்தப் பணிகளில் தம்மை அதிகம் ஈடுபடுத்தி வரும் இளவல்களான கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், மருத்துவர் கி.பிரதாபன் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
















# மன்னார் மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு!

## நீரியல் வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மன்னார் செயலகத்தில் நேற்று உரையாடல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை அடுத்து, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்கங்க ளின் பிரதிநிதிகளுக்கிடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று வெள் ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நிஜாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,காதர் மஸ்தான், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டிராக்டர்களைப் பயன்படுத்தி கரை வலை தொழில் மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதி மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.



மன்னார் கடல் பகுதி ஏனைய இடங்களை விட மாறுபட்டது என்றும், அங்கு கடலடி தாவரங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிலைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பட்டி வலை மற்றும் சுருக்குவலை தொடர்பான பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. நாரா (NARA) நிறுவனத்தின் மூலம் ஆய்வுகளை மேற்கொண்டு, இரண்டு மாதங்களுக்குள் தகுந்த தீர்வை வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்தனர்.

மீனவர்களுக்கான பாடு (மீன்பிடி எல்லை) மற்றும் மீன்பிடி துறைகள் வழங்குவது குறித்தும், கடலரிப்பு தடுப்புக்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டன. இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையிலான நீண்டகால பிரச்சினை குறித்து இக்கூட்டத்தில் கருத்து பரிமாறப்பட்டது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன்–

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவைப் பயன்படுத்தி, இராஜதந்திர ரீதியில் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஜனாதிபதி ஆர்வம் காட்டி வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்களுடன் ஏற்கனவே பேச்சுகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், இரு நாட்டு மீனவர்களும் பாதிக்கப்படாத வகையில் ஒரு சுமுகமான முடிவை எட்ட அரசாங்கம் தீவிரமாக முயன்று வருகிறது. மன்னார் மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் அமையும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் –

மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இடம்பெற்ற இந்தக் கூட்டம் கருத்துக்களைக் கேட்பதற்கான ஒரு கூட்டமாகவே அமைந்திருந்தது.

எனினும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க கூடிய வகையில் அது அமையவில்லை. – எனத் தெரிவித்தார்.







# குஞ்சுக்கால்வெளியில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் உப்பளம் அமைக்க முயற்சி

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளியில் பெரும்பான்மை இனத்தவர்களால் உப்பளம் அமைக்க முயற்சிக்கப்படும் காணிகள், தமிழ் மக்களின் அறுதி உறுதியுட தனியார் காணிள் எனவும், அந்தக்காணிகள் மீட்கப்பட்டு காணிகளுக்குரிய தமிழ் மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும் எனவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கொக்குத்தொடுவாய் கிராமமக்களால் முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் அ.உமா மகேஸ்வரனிடம் எழுத்து மூலமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், காணி ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எழுத்துமூலக் கோரிக்கை மற்றும் காணி ஆவணங்களின் பிரதியைப் பெற்றுக்கொண்ட மாவட்டசெயலாளர் அ. உமாமகேஸ்வரன், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை உப்பளம் அமைக்கும் முயற்சிகளை நிறுத்திவைக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தம்மால் கடிதம் அனுப்பப்படுமெனவும், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் அந்தப் பகுதியில் எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள அனுமதிக்கவேண்டாமென பொலிஸாருக்கும் கடிதம் அனுப்பப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

குஞ்சுக்கால்வெளி பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் சட்டவிரோதமாக பெரும்பான்மை இனத்தவர்களால் உப்பளம் அமைக்க மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளால் ஏற்பட்ட பதற்ற நிலைக்கு தீர்வுகாணுவது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலியே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் பெரும்பான்மையினத்தவர்களால் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் முயற்சியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு இந்தப் பிரச்சினை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்குத்தொடுவாய்ப் பகுதி தமிழ் மக்கள், சட்டவிரோதமாக உப்பளம் அமைக்க முற்பட்ட பெரும்பான்மையினத்தவர்கள், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்பினரின் பங்கேற்புடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்றய் மாலை 03.00மணிக்கு கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இருப்பினும் அந்தக் கலந்துரையாடலில் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் சட்டவிரோதமாக உப்பளம் அமைப்பதற்கு முயற்சித்த தரப்பினர் ஆகியோர் வருகைதரவில்லை.

இந்நிலையில் அந்தக் கூட்டத்தில் குஞ்சுக்கால்வெளிப் பகுதியில் கடந்த 1984ஆம் ஆண்டு தாம் தமது இடங்களிலிருந்து இடம்பெயரும்வரையில் பயிர்செய்கையில் ஈடுபட்டுவந்த தமக்குரிய தனியார் அறுதி உறுதிக் காணிகள், 2011ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்திற்கு பிற்பாடு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பறவைகள் சரணாலயத்திற்குரிய காணிகள் எனக் கூறப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டன எனக் கொக்குத்தொடுவாய் கிராம மக்களாலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனாலும் இதன்போது மாவட்ட செயலாளரிடம் முறையீடுசெய்யப்பட்டது.

அத்தோடு இவ்வாறு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குஞ்சுக்கால் வெளியிலுள்ள தமது பயிற்செய்கைக் காணிகளில் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோது வனஜீவராசிகள் திணைக்களத்தினர் காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொண்டனர் எனவும் இதன்போது மாவட்டசெயலரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இத்தகையசூழலில் குஞ்சுக்கால் வெளியில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது அறுதி உறுதிக் காணிகளில் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் உப்பளம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது வனஜீவராசிகள்

தொடர்ச்சி▼






# குஞ்சுக்கால்வெளியில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் உப்பளம் அமைக்க முயற்சி

**தொடர்ச்சி▲**

திணைக்களம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் காணிகளுக்குரிய கொக்குத்தொடுவாய் மக்களாலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களாலும் இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் முறையிடப்பட்டது.

எனவே குஞ்சுக்கால்வெளி பகுதியிலுள்ள தமது பூர்வீக அறுதி உறுதி பயிர்ச்செய்கைக் காணிகளை தமக்கு மீட்டுத்தருமாறு இதன்போது மாவட்ட செயலாளரிடம் காணிக்குரிய மக்களால் தமது காணி ஆவணங்களுடன் கோரிக்கைக் கடிதங்களும் கையளிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்ங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

குஞ்சுக்கால்வெளியில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது தமிழ் மக்களின் பூர்வீக அறுதி உறுதியுடைய பயிர்ச் செய்கைல் காணிகள் மீட்கப்பட்டு அவர்களிடமே கையளிக்கப்படவேண்டும்.

வனஜீவராசிகள் திணைக்களம் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் அங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ள பலதடவைகள் முயற்சிகளை மேற்கொண்டபோது அவர்களைக் கைது செய்து அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

ஆனால் இங்கு அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக உப்பளம் அமைக்க முயற்சிமேற்கொள்ளப்பட்டமை மற்றும் மரங்களை வெட்டி அங்கு குடிசை அமைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் சட்ட நடவடிக்கைகள் எதுவும் அவர்களுக்கெதிராக இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மிகக்கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். - என்றார்.

மேலும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக அதிகாரப் பரப்பிற்குட்பட்ட பகுதிகளுக்குள் மகாவலி அதிகாரசபையோ, வெலிஓயா பிரதேச செயலகமோ அத்துமீறிய அனுமதிகளை வழங்கமுடியாதெனவும் அவர்கள் ஆதிக்கங்களைச் செலுத்த முடியாதெனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன்போது மாவட்டசெயலாளர் அ.உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தப் பகுதியில் உப்பளம் அமைப்பதற்கு கடந்த 2022ஆம் ஆண்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. ஆனால் நிபந்தனையுடன் கூடிய அனுமதியாகவே அந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது. குறிப்பாக சுற்றுச்சூழல் ஆய்வு செய்யப்படவேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடிய அனுமதியே வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

தற்போது அந்தக் குஞ்சுக்கால் வெளிப் பகுதியில் உப்பளம் அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில், சுற்றுச்சூழல் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னரா குறித்த பகுதியில் உப்பளம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதென வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலரிடம் கேட்டிருந்தேன்.

சுற்றுப்புறச்சூழல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக அந்த உப்பளம் அமைக்க முயற்சிக்கும் தரப்பு கூறுவதாகவும், எனினும் அவ்வாறு சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்த ஆவணங்களும் அவர்களால் தமக்கு காண்பிக்கப்படவில்லை எனவும் வனஜீவராசிகள் திணைக்கள பிராந்திய அலுவலர் தம்மிடம் தெரிவித்தார் எனவும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மேலும் இதன்போது தெரிவித்தார்.

இதுதவிர முன்னாள் வெலிஓயா பிரதேசசெயலாளராலும் குஞ்சுக்கால் வெளி பகுதியில் உப்பளம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம்.

இத்தகைய சூழலில்தான் இந்தக்காணிகள் உங்களுடைய அறுதி உறுதிக் காணிகள் எனத் தெரிவித்து குறித்த காணிகளை மீட்டுத்தருமாறு கோரிக்கைக் கடிதங்களையும், காணிகளுடைய ஆவணங்களையும் என்னிடம் சமர்ப்பித்துள்ளீர்கள்.

இந்தக் காணிகள் தனியார் காணிகளாக இருந்தால், அந்தக்காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தால் அனுமதி வழங்க முடியாது. அவ்வாறு தனியார் காணிகளுக்கு இவ்வாறு உப்பளம் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பின் அது பிழையான நடவடிக்கையாகவே கருதப்படும்.

இவ்வாறு குஞ்சுக்கால்வெளி பகுதியில் உப்பளம் அமைக்கப்பட முயற்சி மேற்கொள்ளப்படும் காணிகள் தனியார் காணிகள் எனவும் அந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்களால் கோரிக்கைக. கடிதத்துடன் காணிகளுக்குரிய ஆவணங்களும் எமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை உப்பளம் அமைக்கும் முயற்சிகளை நிறுத்திவைக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தம்மால் கடிதம் அனுப்பப்படும் என இதன்போது மாவட்டசெயலாளர் தெரிவித்தார்.

அத்தோடு இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாமல் அந்தப்பகுதியில் எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டாமென பொலிஸாருக்கும் கடிதம் அனுப்பப்படுமெனவும் மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரனால் இதன் போது தெரிவிக்கப்பட்டது.






# மீள்குடியேற்றத்திற்குத் தடையாக வனவளத்திணைக்களமே உள்ளது

## சத்தியலிங்கம் எம்.பி. விசனம் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முசல்குத்தி, வீரமாணிக்கங்குளம் கிராமத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த பல குடும்பங்கள் உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த காலங்களில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். தற்போது அவர்கள் தங்கள் சொந்த நிலத்தில் மீள்குடியேற வரும்போது அதற்கு வனவளத்திணைக்களம் தடையாக இருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எனவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த செட்டிகுளம் பிரதேச செயலாளர், ஏற்கனவே 293 குடும்பங்கள் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்துள்ளன எனவும், அவர்களில் பெரும்பாலானோர் காணிக்கான அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கின்றனர் எனவும் , ஏற்கனவே 672 ஏக்கர் நிலங்களை விடுவிக்க வனவளத்திணைக்களம் ஒப்புதல் வழங்கியதாகவும், எனினும் 2024 ஆம் ஆண்டு இந்தக்காணிகள் வனவளத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்ச் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பில் வனவளத்திணைக்களம், பிரதேச செயலகம் என்பன விரைவில் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.







# வவுனியாவில் 293 குடும்பங்களிம் பூர்வீகமான காணிகளை 2024இல் வர்தமானி மூலம் சுவீகரித்த வனத் திணைக்களம்

(கி.வசந்தன்)

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வீரமாணிக்கங்குளம் மற்றும் முசல்குத்திக்குளம் ஆகிய பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த 300 இற்கும் மேற்ப்பட்ட குடும்பங்களின் காணிகள் 2024 இல் வர்த்தமானி அறிவிப்பு செய்யப்பட்டு வனவளத்திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக. குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்றது..

இதன்போது கடந்த கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் மற்றும் காணிகளின் விடுவிப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் –

செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரமாணிக்கங்குளம், முசல்குத்திக்குளம் ஆகிய கிராமங்களில் 1977 ஆம் ஆண்டு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் திரும்பி வந்து மீளக்குடியமர சென்ற நிலையில் அதற்கு வனவள திணைக்களம் தடை ஏற்ப்படுத்தியுள்ளது. இதற்கான முடிவினை எடுக்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த செட்டிகுளம் பிரதேச செயலாளர்–

இந்தக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் என 293 குடும்பங்கள் அங்கு மீளக்குடியமர்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். அவர்களில் பலர் காணிக்குரிய ஆவணங்களையும் வைத்துள்ளனர். அந்த வகையில் மொத்தமாக 672 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு நாம் கோரியிருந்தோம். அந்த காணிகளுக்குள் இடிந்த நிலையில் உள்ள கிணறுகள் உள்ளன்ச், பழைய பாடசாலைகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன, இடிபாடைந்த கட்டடங்கள் உள்ளன. இந்தக் காணிகளை விடுவிக்க முடியும் என தெரிவித்திருந்த வனவளத் திணைக்களம் கடந்த 2024 ஆம் ஆண்டு அவற்றை வர்த்தமானி அறிவிப்பு செய்து கையகப்படுத்தியுள்ளது. – என்று தெரிவித்தார்.



பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரும், குடியேற்ற உத்தியோகத்தரின் பங்களிப்புடனேயே இது வர்த்தமானி அறிவிப்பு செய்துள்ளதாக வனவளத்திணைக்கள அதிகாரி தெரிவித்தார். எனினும் அவ்வாறு இடம்பெறவில்லை என பிரதேச செயலாளர் மறுத்திருந்தமையுடன் எமக்கு எந்த ஒரு விடயமும் தெரியப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இந்தக் காணிகள் தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலாளர், வனவளத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து பிறிதொரு நாளில் கலந்துரையாடி முடிவினை எடுக்குமாறு ஒருங்கிணைப்பு குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் –

வனவளத் திணைக்களம் தொடர்பாக இங்கு கதைப்பதில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. கதைக்கின்ற எவையும் நடைபெறுவதில்லை என்று விசனம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை கடந்த கூட்டங்களில் கோரிக்கை விடுவிக்கப்பட்டதற்கமைய வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ள17 குளங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும், 24 குளங்கள் தொடர்பாக திணைக்களம் கள ஆய்வு செய்து வருவதாகவும், 5 குளங்களை விடுவிக்க முடியாது என திணைக்களத்தினால் சுட்டிகாட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









# ‘அரச மதமும் தனியார் காணியும்’ யாழ். பல்கலையில் கலந்தாய்வு

தனியார் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை முன்னிறுத்திய கலந்துரையாடல் ‘அரச மதமும் தனியார் காணியும்’ எனும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் ஒழுங்கமைப்பில் நேற்று வெள்ளிக் கிழமை, பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு – கிழக்கில், சிங்கள பௌத்த மதச் சின்னங்களை முன்னிறுத்திய நில ஆக்கிரமிப்புக்களில் முதன்மையான தையிட்டி விவகாரத்தில் அரச மதத்தை மையமாகக் கொண்ட தனியார் காணி உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள சமூக, சட்ட, அரசியல் மற்றும் மனித உரிமை பரிமாணங்கள் மற்றும் இனத்துவ அரசு என்பவை தொடர்பில் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ம.திருவரங்கன், சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன், வலி. வடக்கு பிரதேச சபைத் சபையின் தவிசாளர் திரு. சோ.சுகிர்தன் மற்றும் தையிட்டி விகாரையினால் நிலத்தினை இழந்த திருமதி. சா.சுகுமாரி ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி தி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், பொ. கஜேந்திரகுமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடக்கு – கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியாளர்கள், ஊழியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்றுக் கருத்துக்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

















# விஜய்யிடம் விவாகரத்து கோரி மனைவி சங்கீதா வழக்கு தாக்கல்




நடிகர் விஜய்யிடமிருந்து விவாகரத்து கோரி அவருடைய மனைவி சங்கீதா செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை விசாரித்த முதன்மை அமர்வு நீதிமன்றம், வழக்கை குடும்ப நல நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டது.

முன்னணி நடிகரும், தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான விஜய்யிடமிருந்து தனக்கு சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் விவாகரத்து கோரி இங்கிலாந்து பிரஜையான அவரது மனைவி சங்கீதா செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு:

எனக்கும், விஜய்க்கும் கடந்த 1998 ஜூலை 10 இல் இங்கிலாந்தில் பதிவுத் திருமணம் நடந்தது.

அதன்பிறகு எங்களது திருமணம் இந்து முறைப்படி 1999 ஒகஸ்ட் 25 இல் சென்னை ராஜா முத்தையாமன்றத்தில் நடந்தது. எனது கணவர் தற்போது த.வெ.க. கட்சியைத் தொடங்கி அதன் தலைவராக உள்ளார்.

எங்களுக்கு ஜேசன் சஞ்சய் (வயது 25) என்ற மகன், திவ்யா சாஷா (வயது 20) என்ற மகள் உள்ளனர். தொடக்கத்தில் எங்களது இல்லற வாழ்க்கையில் பிரச்சினையின்றி சுமூகமாக சென்றது. படப்பிடிப்பு இல்லாத காலகட்டங்களில் நாங்கள் குடும்பத்துடன் இங்கிலாந்துக்கு சென்றுவிடுவோம்.

அதேபோல நானும் படப்பிடிப்பு தளங்களுக்கும், திரைப் படங்கள் தொடர்பான நிகழ்வுகளிலும் பங்கேற்றுள்ளேன். சில நேரங்களில் எங்களுக்குள் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை நாங்களே சரிசெய்து கொண்டு வாழ்க்கையை சீராக நடத்தி வந்தோம்.

ஆனால், கடந்த 2021 ஏப்ரல் மாதம் எனது கணவருக்கும், ஒரு நடிகைக்கும் திருமணத்தை மீறிய தொடர்பு இருந்தது தெரியவந்தது. இதனால் மனதளவில் பாதிப்படைந்தேன். அதன்பிறகு அந்த உறவைத் துண்டித்து விடுவதாக விஜய் உறுதியளித்தார்.

ஆனால், அதன்படி அவர் நடந்துகொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையை சுமூகமாகப் பேசி ஒரு முடிவுக்கு கொண்டுவர எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. குழந்தைகள் எதிர்காலம் கருதி நானும் அமைதிகாத்து வந்தேன்.

ஆனால் விஜய் என்னுடன் இருந்த திருமண பந்தத்தை அறவே துண்டித்துக் கொண்டதால் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதித்து தனிமைப்படுத்தப்பட்டேன்.

இந்நிலையில், மனைவி என்ற முறையில் எனக்கும், குடும்பத்துக்கும் வழங்கி வந்த அனைத்து நிதி உதவிகளையும் எனது கணவர் விஜய் நிறுத்தி விட்டார். தற்போது எங்களுக்குள் எந்த உறவும் இல்லை. எனவே எனக்கு விவாகரத்து வழங்க வேண்டும். இவ்வாறு தனது மனுவில் சங்கீதா கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த செங்கல்பட்டு முதன்மை அமர்வுநீதிமன்றம், இந்த வழக்கை செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது. அதன்படி இந்த வழக்கு ஏப்ரல் 20 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

# பன்னீர்செல்வம் அன்பானவர், பண்பானவர்: தி.மு.கவுக்கு வரவேற்று ஸ்டாலின் பாராட்டு



“2026 சட்டப்பேரவைத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் பாசிச பா.ஜ.க.வுக்கும் இடையிலான ஜனநாயகப் போர் என்பதால், பல்வேறு ஜனநாயக சக்திகளும் நம் கூட்டணியில் இணைந்து வருகிறார்கள். நம்மோடு இணைந்துள்ள ஓ.பன்னீர்செல்வம் அன்பானவர், பண்பானவர், அடக்கமானவர்.”

–இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“முன்னாள் முதல்வரும், அருமைச் சகோதரருமான ஓ.பன்னீர்செல்வம் தாய்க் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்துள்ளார். அவரை வருக வருக என வரவேற்கிறேன்.

திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவரின் பெயரைத் தாங்கிய அவர் திராவிட இயக்கக் கொள்கை காக்கும் நம் பேரியக்கத்தில் இணைந்துள்ளார். 2026 சட்டப்பேரவைத் தேர்தல் என்பது தமிழ்நாட்டுக்கும் பாசிச பா.ஜ.க.வுக்கும் இடையிலான ஜனநாயகப் போர். இதனை உணர்ந்துதான் பல்வேறு ஜனநாயக சக்திகளும் கழகக் கூட்டணியில் இணைந்து வருகிறார்கள். நம்மோடு இணைந்துள்ள சகோதரர் ஓ.பன்னீர்செல்வம் அன்பானவர், பண்பானவர், அடக்கமானவர். அவரது வரவு நல்வரவாகட்டும். தமிழ்நாடு வெல்லட்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரித்தானிய இடைத்தேர்தலில் தொழிலாளர் கட்சி படுதோல்வி

## பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு நெருக்கடி




பிரித்தானியாவின் கோர்டன் மற்றும் டென்டன் தொகுதிக்கான இடைத்தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

இத்தொகுதியில் பசுமைக் கட்சி முதல் முறையாக வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

தொழிலாளர் கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட இத்தொகுதியில், 34 வயதான பிளம்பர் தொழில் செய்யும் ஹன்னா ஸ்பென்சர் வெற்றி பெற்று, வட இங்கிலாந்தின் முதல் பசுமைக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கடந்த 2024 பொதுத்தேர்தலில் 13,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இத்தொகுதியில், தற்போது தொழிலாளர் கட்சி மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது பிரதமர் கீர் ஸ்டார்மரின் தலைமைக்கு விடப்பட்ட பெரும் சவாலாகப் பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் காசா போர் தொடர்பான தொழிலாளர் கட்சியின் நிலைப்பாட்டில் அதிருப்தி அடைந்த முஸ்லிம் வாக்காளர்கள் மற்றும் இடதுசாரி ஆதரவாளர்கள் பசுமைக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

பிரபல அரசியல்வாதியான அண்டி பர்ன்ஹாம் இத்தொகுதியில் போட்டியிட பிரதமர் கீர் ஸ்டார்மர் தடுத்தமை கட்சிக்குள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொதுச் சேவைகளில் நிலவும் சுணக்கம் காரணமாக மக்கள் ஆளுங்கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து பிரதமர் கீர் ஸ்டார்மரின் தலைமைக்கு எதிராக அக்கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது ஒரு ஏமாற்றமளிக்கும் முடிவு என்று ஒப்புக்கொண்ட பிரதமர், எஞ்சியுள்ள காலத்திலும் தொடர்ந்து போராடுவேன் எனத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் துணைத் தலைவரான அஞ்சலா ரெய்னர், இந்தத் தோல்வி ஒரு எச்சரிக்கை மணி என்றும், அரசு இன்னும் துணிச்சலாகச் செயல்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் இங்கிலாந்தின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தோல்வி தொழிலாளர் கட்சிக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

அதேவேளை, பசுமைக் கட்சி மற்றும் ரிஃபார்ம் யூகே ஆகிய கட்சிகளின் எழுச்சி பிரித்தானியாவின் பாரம்பரிய இருகட்சி அரசியலைச் சிதைப்பதாக அரசியல் ஆய்வாளர் ஜோன் கர்டிஸ் தெரிவித்துள்ளார்.

## ஈரானில் பதற்றம்:

# பிரித்தானிய தூதரக அதிகாரிகள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்



ஈரான் மீது அமெரிக்கா இராணுவத் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சம் அதிகரித்துள்ள நிலையில், ஈரானில் உள்ள தனது தூதரக அதிகாரிகளை பிரித்தானியா தற்காலிகமாக மீள அழைத்துள்ளது .

நேற்று வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ பயண ஆலோசனையில், ஈரானில் நிலவும் பாதுகாப்புச் சூழலைக் கருத்திற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரானில் உள்ள பிரித்தானிய தூதரகம் கடந்த ஜனவரி மாதமே மூடப்பட்ட நிலையில், தற்போது அதிகாரிகள் அனைவரும் வெளியேறியுள்ளனர்.

இனி அங்கிருந்தான பணிகள் தொலைதூர முறை மூலம் மட்டுமே முன்னெடுக்கப்படும்.

பாதுகாப்பு கருதி டெல் அவிவ் நகரில் இருந்த சில அதிகாரிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் இஸ்ரேலுக்குள்ளேயே வேறு பாதுகாப்பான இடங்களுக்கு பிரித்தானியா மாற்றியுள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ளார்.

இதற்காக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தனது போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை நிலைநிறுத்தி வருகிறது.

ஈரான்மீதானதாக்குதலுக்குபிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள டியாகோ கார்சியா தளத்தைப் பயன்படுத்த ட்ரம்ப் விடுத்த கோரிக்கையை, சர்வதேச சட்டங்களை மீறும் என்ற அச்சத்தால் பிரதமர் கீர் ஸ்டார்மர் நிராகரித்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியத் தேவையின்றி பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு பிரித்தானிய வெளியுறவுத் துறை தனது குடிமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

நிலைமை எந்த நேரத்திலும் மோசமடையலாம் என்றும், சர்வதேச விமானப் போக்குவரத்துகள் திடீரென நிறுத்தப்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 28.02.2026




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதற்றத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள்




இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதற்றப்படாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.

உங்கள் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துங்கள். ஒவ்வாமை காரணமாக சளி




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பலவீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மாற்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. எனவே இருக்கும் பணத்தைக் கொண்டு நிர்வகிக்க உங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி




இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.




இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத்




உங்கள் திட்டங்கள் மற்றும் அணுகுமுறை மூலம் இன்றைய நாளால் அற்புதமான நாளாக ஆக்குவீர்கள். உங்கள் உரையாடல் திறனை மேம்படுத்தி நன்மை பெறுவீர்கள்.

பணியில் சில தடுமாற்றங்கள் காணப்படும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டத்தை சார்ந்திருப்பதை விட கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவையான அணுகுமுறை கொள்வீர்கள், இதனால் அன்பு மேலும் வளரும்.

நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். சிறய அளவில் கடன் பெறுவதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள்.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 28.02.2026




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது. ஆனால் சிறிது சோர்வுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.



இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.





# கூட்டுறவுப் பணியாளர்களுக்கான செயலமர்வும் ‘ஐக்கிய தீபம்’ பத்திரிகை வெளியீடும் நேற்று

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஒன்றிணைந்த கூட்டுறவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், கணக்காளர்கள் மற்றும் சமாசங்களின் பொது முகாமையாளர்கள், கணக்காளர்களுக்கான மாவட்ட மட்ட விசேட செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான செயலமர்வும் நடைபெற்றது.

“மனப்பாங்கு மாற்றமும் ஆற்றல் விருத்தியும்” எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த செயலமர்வுகளில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்வியற் துறை விரிவுரையாளர் ரட்ணம் சர்வேஸ்வரா விரிவுரையாளராகக் கலந்துகொண்டார்.

அத்துடன் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான ‘ஐக்கிய தீபம்’ பத்திரிகையும் நேற்றைய நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





